நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

June 2017

2017

தரம் : இடைநிலை மத்திய பிரவு (ஆண்டு 7, 8)
Level : Intermediate - Mid (Year 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 65 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

I. பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க:
மதிப்பெண்கள் 5 * 3 = 15

பொதுமக்கள் குளிப்பதற்காக அனைத்து வசதிகளும் நிறைந்த குளியலறைகள் அந்த நகரம் முழுவதும் இருந்தன. அவற்றினுள் ஒன்றில் வேலப்பர் என்ற முதியவர் குளிக்கச் சென்றார். அவருடைய ஏழ்மைத் தோற்றத்தைக் கண்ட அங்குள்ள ஊழியர்கள், ஒரு சிறு சோப்பையும் உடம்பைத் துடைத்துக்கொள்ள அழுக்கான துண்டையும் கொடுத்தனர்.

வேலப்பர் முகம் சுளிக்காமல் குளியலை முடித்துக்கொண்டு புறப்பட்டார். அப்பொழுது அங்கிருந்த ஊழியர்களுக்கு ஒரு தங்க நாணயத்தை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றார். அதை சற்றும் எதிர்பாராத ஊழியர்கள் வேலப்பரை அலட்சியப்படுத்தியதற்காகப் பெரிதும் வருந்தினர். வேலப்பரை நல்ல முறையில் உபசரித்திருந்தால் மேலும் சில நாணயங்கள் அன்பளிப்பாகக் கிடைத்திருக்குமே என்று கவலைப்பட்டனர்.

சில நாள்களுக்குப் பிறகு வேலப்பர் அதே குளியலறைக்குக் குளிக்கச் சென்றார். அவரை அடையாளம் கண்டுகொண்ட ஊழியர்கள், அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று, புத்தம்புதிய துண்டையும் நறுமணம் மிக்க சோப்பையும் கொடுத்து உபசரித்தனர். குளியலை முடித்துக்கொண்டு திரும்பும்போது, அங்கிருந்த ஊழியர்களுக்குச் சாதாரண நாணயங்களை அன்பளிப்பாக கொடுத்தார் வேலப்பர். தங்க நாணயங்களை அன்பளிப்பாக எதிர்பார்த்த ஊழியர்கள் ஏமாற்றமடைந்து வேலப்பரை வியப்போடு பார்த்தார்கள்.

“என்ன விழிக்கிறீர்கள்? அன்று நான் கொடுத்த தங்க நாணயத்தை இன்றைக்குரிய அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள்! இன்று நான் கொடுத்த சாதாரண நாணயங்களை அன்றைக்குறிய அன்பளிப்பாக நினைத்துக்கொள்ளுங்கள்!” என்றார் வேலப்பர். தோற்றத்தைப் பார்த்து உபசரித்த குற்றத்தை உணர்ந்த ஊழியர்கள் தம் செயலுக்காக வெட்கித் தலை குனிந்தனர்.

1. வேலப்பருக்கு ஏன் ஊழியர்கள் அழுக்குத் துண்டைக் கொடுத்தனர்?

(அ) அவரை ஒரு ஏழை என்று எண்ணியதால்
(ஆ) அவரை அவர்கள் முன்னர் பார்த்திராததால்
(இ) அவரை அவர்கள் வெறுத்ததால்
(ஈ) அவரை அவர்கள் யார் என்று அறியாததால்

2. ஒரு தங்க நாணயத்தை வேலப்பர் அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றபின் ஊழியர்கள் என்ன நினைத்தனர்?

(அ) அவரை நன்கு உபசரிக்க எண்ணினர்
(ஆ) அவரை புகழ்ந்து பேசினர்
(இ) அவரை அலட்சியப்படுத்தியதை எண்ணி கவலைப்பட்டனர்
(ஈ) அவரிடம் மன்னிப்புக் கேட்க முடிவு செய்தனர்

3. மீண்டும் வேலப்பர் குளியலறைக்கு வந்தபோது ஊழியர்கள் அவரை ஏன் வரவேற்று உபசரித்தனர்?

(அ) அவர் அவர்களை மெச்சியதால்
(ஆ) அவர் யார் என்பதை அவர்கள் அறிந்த காரணத்தால்
(இ) அவர் விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருந்ததால்
(ஈ) அவர் அவர்களிடம் தாம் யார் என்பதைக் கூறியதால்

4. ஊழியர்கள் ஏமாற்றம் அடைந்ததற்குக் காரணம் என்ன?

(அ) வேலப்பர் அவர்களை ஏசியதால்
(ஆ) அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காததால்
(இ) அவர்கள் தங்க நாணயங்கள் எதிர்பார்த்ததால்
(ஈ) வேலப்பர் மீண்டும் குளிக்க வராததால்

5. ஊழியர்கள் எதற்கு வெட்கப்பட்டனர்?

(அ) தோற்றத்தைப் பார்த்து ஒருவரை மதிப்பிட்டதற்கு
(ஆ) வேலப்பரை உபசரித்ததற்கு
(இ) பரிசு கிடைக்காமல் போனதற்கு
(ஈ) ஏழைகளை அவமதித்தற்கு

II. பின்வரும் 6 முதல் 8 வரையுள்ள வினாக்களுக்கு அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தெரிவு செய்க: மதிப்பெண்கள் 4 * 2 = 8

6. அன்பளிப்பாக

(அ) காணிக்கையாக
(ஆ) வெகுமதியாக
(இ) பரிசாக
(ஈ) சம்பளமாக

7. அலட்சியப்படுத்தியதற்காக

(அ) மதித்ததற்காக
(ஆ) பேணியதற்காக
(இ) கவனித்ததற்காக
(ஈ) உதாசீனப்படுத்தியதற்காக

8. வியப்போடு

(அ) பதற்றத்தோடு
(ஆ) பயத்தோடு
(இ) ஆச்சரியத்தோடு
(ஈ) அதிர்ச்சியோடு

9. விழிக்கிறீர்கள்

(அ) செய்கிறீர்கள்
(ஆ) பார்க்கிறீர்கள்
(இ) தூங்குகிறீர்கள்
(ஈ) கொடுக்கிறீர்கள்

III. பின்வரும் 10 முதல் 14 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான ஒத்தகருத்துள்ள விடையினைத்தெரிக:
மதிப்பெண்கள் 5 * 1 = 5

10. நான் கவனமாக கொதிநீரை வடித்து ஊற்றுகிறேன். இங்கு “கொதிநீர்” என்பது

(அ) குளிர் நீர்    (ஆ) சுடுநீர்
(இ) தண்ணீர்    (ஈ) கடல் நீர்

11. மாணவர்களுக்குப் படிப்புதானே முக்கியம். இங்கு “முக்கியம்” என்பது

(அ) பாராட்டு    (ஆ) தேவை
(இ) பட்டப்படிப்பு    (ஈ) அவசியம்

12. வைத்தியரின் ஆலோசனையின் பேரில் மாமாவின் பயணம் தடைபட்டது. இங்கு “ஆலோசனை” என்பது

(அ) கேட்டார்    (ஆ) படிப்பு
(இ) அறிவுரை    (ஈ) நோய்

13. ஒரு மனிதனின் வாழ்க்கைக்காலம் பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைகிறது. இங்கு “தொடங்கி” என்பது

(அ) சடங்கு    (ஆ) பிறப்பு
(இ) முடிவு    (ஈ) ஆரம்பம்

14. வறண்ட நிலப்பகுதிகளுக்கு நீர் அவசியம். இங்கு “வறண்ட” என்பது

(அ) பாலைவனம்    (ஆ) வரட்சியான
(இ) மலர்ந்த    (ஈ) உடைந்த

IV. கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை கருத்தூன்றிப் படித்து கீழ்வரும் 15 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க: மதிப்பெண்கள் 4 * 2 = 8




15. இந்த அழைப்பிதழை வழங்கியவர் யார்?

(அ) சிட்னி வாழ் தமிழ் மாணவர்கள்
(ஆ) ஹோம்புஷ் தமிழ் பாடசாலை
(இ) நியூ சவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பு
(ஈ) துர்க்கை அம்மன் ஆலயம்

16. இந்த நிகழ்ச்சியை எதற்காக நடத்துகிறார்கள்?

(அ) மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி ஊக்குவிப்பதற்கு
(ஆ) கலை நிகழ்ச்சிகளை நடத்தி நிதி திரட்டுவதற்கு
(இ) சிட்னி வாழ் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்கு
(ஈ) மாணவர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்கு

17. இந்த நிகழ்ச்சியை ஒன்றிணைந்து நடத்துபவர்கள் யார்?

(அ) விசேட சித்தி பெற்ற மாணவர்கள்
(ஆ) சிட்னி வாழ் தமிழர்கள்
(இ) நீண்டகால சேவை புரிந்த ஆசிரியர்கள்
(ஈ) நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் அனைத்துத் தமிழ் பாடசாலைகள்

18. இந்த நிகழ்ச்சியில் இடம்பெறாத நிகழ்வு எது?

(அ) கலை கலாசார நிகழ்வுகள்
(ஆ) மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்
(இ) ஆசிரியர்களை கௌரவித்தல்
(ஈ) தமிழ்ப் பரீட்சை நடத்துதல்

V. பின்வரும் 19 முதல் 22 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க:
மதிப்பெண்கள் 5 * 1 = 5

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | (அ) முல்லை | (ஆ) நற்றிணை | (இ) நெய்தல் | (ஈ) பாலை |
| 20. | (அ) சிலப்பதிகாரம் | (ஆ) சீவகசிந்தாமணி | (இ) திருக்குறள் | (ஈ) மணிமேகலை |
| 21. | (அ) இளங்கோ அடிகள் | (ஆ) வள்ளுவர் | (இ) கட்டபொம்மன் | (ஈ) கம்பர் |
| 22. | (அ) புல்லாங்குழல் | (ஆ) வீணை | (இ) ஓவியம் | (ஈ) மேளம் |
| 23. | (அ) பார்வை | (ஆ) களைப்பு | (இ) சோர்வு | (ஈ) மகிழ்ச்சி |

VI. பின்வரும் 24 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடங்களுக்கு பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க:
மதிப்பெண்கள் 5 * 2 = 10

மாதவி மிகவும் பொறுப்புள்ள மாணவி. அவள் தினமும் (24).________________ வீடு திரும்பியதும் முதலில் தன் வீட்டுப் பாடங்களைத்தான் செய்வாள். அதன் பின் இளைப்பாறுவாள். ஆனால், அவள் தம்பி அப்படியல்ல. அவன் (25).________________ வந்ததும் என்ன விளையாடலாம் என்று யோசிப்பான். வீடு திரும்பியதும் அம்மா சமைத்த சுவையான (26)________________ குறை கண்டுபிடிப்பான். பின் தன் பள்ளியில்

(27).________________ இரவல் பெற்ற கணினி விளையாட்டுகளை விளையாடத் தொடங்குவான். அவ்வப்போது அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன் (28).________________ கடைக்குச் சென்று விடுவான். தினமும் அவனைப் படிக்கத் தூண்டுவது அம்மாவிற்கு சவாலாக இருந்து வருகிறது.

24. (அ) பள்ளியை (ஆ) பள்ளியிலிருந்து (இ) பள்ளிக்கு (ஈ) பள்ளியோடு

25. (அ) வீட்டோடு (ஆ) வீட்டிலிருந்து (இ) வீட்டை (ஈ) வீட்டுக்கு

26. (அ) உணவால் (ஆ) உணவில் (இ) உணவை (ஈ) உணவுக்கு

27. (அ) நண்பர்களிடமிருந்து (ஆ) நண்பர்களால்
(இ) நண்பர்களை (ஈ) நண்பர்களுக்கு

28. (அ) அப்பாவால் (ஆ) அப்பாவுக்கு (இ) அப்பாவுடன் (ஈ) அப்பாவை

VII. பின்வரும் 29 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களைத் தமிழுக்கும், தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்து எழுதுக. மதிப்பெண்கள் 2

29. நான் என்னுடைய நண்பர்களை கடைத்தெருவில் பார்த்தேன்

_______________________________________________

30. அடுத்த மாதம் நாங்கள் எங்களுடைய ஊருக்குப் போவோம், ஏனென்றால் பள்ளி விடுமுறை தொடங்குகிறது. நீங்களும் உங்களது ஊருக்குப் போவீர்களா? மதிப்பெண்கள் 3

_______________________________________________

31. My brother is taller than me
மதிப்பெண்கள் 2

_______________________________________________

32. It is customary that one eats sambar rice before eating curd rice
மதிப்பெண்கள் 3

_______________________________________________

VIII. பின்வரும் 33 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சேர்த்து எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க:
மதிப்பெண்கள் 4 * 1 = 4

33. நாம் சிறுவயதிலேயே நன்மை + பழக்கம் பழக வேண்டும்

(அ) நற்பழக்கம் (ஆ) நன்மைபழக்கம்
(இ) நல்லபழக்கம் (ஈ) நன்பழக்கம்

34. ஈரம் + நிலம் இருந்தால் மரங்கள் நன்றாக செழித்து வளரும்

(அ) ஈரம்நிலம் (ஆ) ஈரமான நிலம்
(இ) ஈரந்நிலம் (ஈ) ஈரநிலம்

35. இளவரசியின் பெரிய + அழகு நாடெங்கும் பேசப்பட்டது

(அ) பெறிய அழகு (ஆ) பெருமைஅழகு
(இ) பேரழகு (ஈ) பெருமையழகு

36. அவர்கள் சேமிப்பு + என்னும் பழக்கத்தை சிறுவயது முதல் கடைபிடிக்கிறார்கள்

(அ) சேமிப்புஎன்னும் (ஆ) சேமிப்பென்னும்
(இ) சேமிப்புனென்னும் (ஈ) சேமிப்புப்பெனும்

IX. பின்வரும் 37 முதல் 41 வரையுள்ள வினாக்களில் பேச்சு வழக்கில் உள்ள சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றுக:
மதிப்பெண்கள் 5 * 1 = 5

37. போட்டியில் காந்தன் மிகச் சிறந்த சமயக்காரன் என்ற விருதை பெற்றான்

(அ) சமையல்காறன் (ஆ) சமையற்காரன்
(இ) சமயற்காரன் (ஈ) சமயல்க்காரன்

38. இன்று காத்துடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை அறிக்கை அறிவித்தது

(அ) காற்றுடன் (ஆ) கார்த்துடன்
(இ) காத்றுடன் (ஈ) காத்தோடு

39. மாணவிகள் நடனம் ஆடுவதை அனைவரும் பாத்துக் கிட்டு நின்றார்கள்

(அ) பாத்துக்கொண்டு (ஆ) பார்த்துக்கொண்டு
(இ) பார்த்து கொண்டு (ஈ) பார்த்துக்கிட்டு

40. பழங்கால கோபுரங்களில் பல கல்லு சிலைகள் இருக்கின்றன

(அ) கல் சிலைகள் (ஆ) கல்லுசிலைகள்
(இ) கல்சிலகள் (ஈ) கற்சிலைகள்

41. மாமியின் திருமணத்திற்கு சொந்தக்காரங்க பலர் வந்தனர்

(அ) சொந்த ஆட்கள் (ஆ) சொந்தங்க
(இ) சொந்தக்காரர்கள் (ஈ) சொந்தக் காரங்கள்

X. பின்வரும் 42 முதல் 46 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை தெரிவு செய்க
மதிப்பெண்கள் 5 * 1 = 5

42. கலையரங்கில் நடிப்பவர்
(அ) மாணவர் (ஆ) ஆசிரியர் (இ) நடிகர் (ஈ) பாடகர்

43. கதை எழுதுபவர்
(அ) புலவர் (ஆ) கதாசிரியர் (இ) ஆசிரியர் (ஈ) உழவர்

44. கடிதம் கொடுப்பவர்
(அ) கவிஞர் (ஆ) கொத்தர் (இ) வேடர் (ஈ) தபால்காரர்

45. மிளகாய் ஒரு
(அ) செடி (ஆ) கொடி (இ) புதர் (ஈ) மரம்

46. நெல் ஒரு
(அ) மலர் (ஆ) கிழங்கு (இ) மரக்கறி (ஈ) தானியம்

XI. பின்வரும் 47 முதல் 51 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்றொடர்களைப் பயன்படுத்தி பழமொழியை நிறைவு செய்க:
மதிப்பெண்கள் 5 * 1 = 5

47. கைக்கெட்டினது ____________________

48. சற்கரை என்றால் ____________________

49. எலி வளையானாலும் தனி ____________________

50. கழுதைக்கு தெரியுமா ____________________

51. மின்னுவதெல்லாம் ____________________

(அ) கற்பூர வாசனை (ஆ) வளை வேண்டும்
(இ) வாய்க்கு எட்டவில்லை (ஈ) பொன்னல்ல
(உ) தித்திக்குமா

XII. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து 30 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:
(குறிப்பு: கூட்டு வாக்கியங்கள் மற்றும் கலப்பு வாக்கியங்கள் இருந்தால் நல்லது)
மதிப்பெண்கள் = 20

52. ஏதேனும் ஒரு பண்டிகையைப் பற்றி கட்டுரை எழுதுக
(அல்லது)
'உங்கள் தனிப்பட்ட உலகம்' பற்றி கட்டுரை எழுதுக

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2017